(ஊ) உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவு. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு 1995 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1995), மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு 1995 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1995)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். இதனால் பல்வேறு வழக்குகள் அந்தந்தப் பகுதியிலே தீர்க்கப்படுகிற வாய்ப்பு ஏற்படும். அதோடு ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறுகிறேன். இப்போது நீதிமன்றங்களுக்கு கோடைவிடுமுறை என்றும் மற்ற வகையிலேயும் விடுமுறை அதிகம் இருப்பதும் இந்தக் காலதாமதத்திற்கு ஒரு காரணமாக இருக்கிறது. வருகின்ற காலத்தில் அதையும் நமது அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தையும் ஆய்விலே எடுத்துக்கொண்டு, வருகின்ற காலத்திலே சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய கருத்துக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆனால் ஒட்டியிருக்கிறது. அது கவனிக்கப்படும்.

@ *5-5-1995* நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு 1995 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

1995 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல். 1995 ஆம் ஆண்டு மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1995), மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1995)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ *5-5-1995* நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS